

## 2026 சட்டமன்றத் தேர்தலில், 200க்கும் அதிகமான தொகுதிகளை வெல்ல

# இளைஞர் அணியினர் முன்களப் படை வீரர்களாக செயல்பட வேண்டும்!

**சென்னை, செப். 9 -**

**சென்னை, அண்ணா அறிவாலயத்தில் சென்னை வடக்கு மாவட்டத்துக்கு உட்பட்ட பெரம்பூர், ஆர்.கே.நகர் மற்றும் இராயபுரம் சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள வார்டு-பாகங்களுக்குப் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணி நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டத்தில் இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு எழுச்சிமிக்க உரையாற்றினார்.**

**அப்போது அவர், ``2026-சட்டமன்றத் தேர்தல் முடிவுகளைத் தீர்மானிக்கும் முனைப்புடன், கழக இளைஞர் அணியினர் முன்களப் படை வீரர்களாக செயல்படவேண்டும் எனக் குறிப்பிட்டார்.**

**இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு: -**

## சென்னை வடக்கு மாவட்ட புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டத்தில்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சிமிகு உரை!



சென்னை வடக்கு மாவட்டத்துக்கு உட்பட்ட பெரம்பூர், ஆர்.கே.நகர், இராயபுரம் இந்த மூன்று சட்டமன்றத் தொகுதியில் உள்ள புதிதாக தேர்வு செய்யப்பட்டுள்ள வட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் பாக அமைப்பாளர்களுக்கான இந்த அறிமுகக் கூட்டத்தில் கலந்துகொண்டு உங்களை எல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இந்த நிகழ்ச்சியை இவ்வளவு சிறப்பாக ஏற்பாடு செய்த உங்களுடைய மாவட்டக் கழகப் பொறுப்பாளர் என் ஆருயிர் அண்ணன் ஆர்.டி.சேகர் அவர்களுக்கு இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு காலையில்தான் உங்களின் அறிவிப்பு வந்தது. உங்களின் மாவட்டத்திற்கான அறிவிப்பு முரசொலியில வந்தது. சூட்டோடு, சூடாக இன்று காலையில் அறிவிப்பு, மாலையில் அறிமுகக் கூட்டம் நடத்துகிறோம் என்றால், அதுதான் இளைஞர் அணியின் சிறப்பு. இளைஞர் அணி எவ்வளவு வேகமாக செயல்படுகிறது என்பதற்கு இதைவிட மிகச்சிறந்த உதாரணம் எதுவுமே இருக்க முடியாது.

### அன்பு– எழுச்சி– ஆரவாரம்

முதலில் பொறுப்புக்கு வந்திருக்கக்கூடிய அத்தனைப் பேருக்கும் என்னுடைய அன்பார்ந்த பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். பலமுறை இளைஞர் நிகழ்ச்சியில் பேசும்போது, ஒவ்வொரு முறையும் சொல்வதுதான். எத்தனையோ நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறேன். அரசு நிகழ்ச்சி, கழக நிகழ்ச்சி கழகத்தின் நிகழ்ச்சி, திருமண நிகழ்ச்சி, இப்படி எத்தனையோ நிகழ்ச்சிகளில் கலந்துகொள்கிறேன். ஆனால், இந்த இளைஞர் அணி நிகழ்ச்சியில் கலந்துகொண்டு இளைஞர் அணி நிர்வாகிகள் இளைஞர் அணி தம்பிமார்கள் உங்களையெல்லாம் பார்க்கும்போது என்னுடைய குடும்ப நிகழ்ச்சியில் கலந்துகொண்டு என்னுடைய சொந்த அண்ணனையும், தம்பியையும் பார்ப்பது போன்ற உணர்வு ஒவ்வொரு முறையும் எனக்கு ஏற்படும். அந்த அளவுக்கு உங்களுடைய அன்பு, உங்களுடைய எழுச்சி, உங்களுடைய ஆரவாரம் இருக்கும். அந்த உணர்வோடு, மகிழ்ச்சியோடு, நிகழ்ச்சியோடு இங்கே நின்று கொண்டிருக்கிறேன்.

சென்னை வடக்கு மாவட்டத்திற்கு இன்னொரு தனிச்சிறப்பு உண்டு. கழகத்தின் தாய் வீடு என்றால், அது சென்னை வடக்கு மாவட்டம்தான். அங்குதான் கழகம் பிறந்தது. 1948-ஆம் ஆண்டு இதே செப்டம்பர் மாதம் 17 ஆம் தேதி நம் இராயபுரத்தில் நம் திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கப்பட்டது.

### அன்பகம்– அறிவாலயம்

நாம் இப்போது அறிவாலயத்தில் நின்று பேசுகிறோம். இளைஞர் அணிக்கு `அன்பகம்' இருக்கிறது. ஆனால், கழகத்திற்காக முதலில் தொடங்கப்பட்ட அலுவலகம், கழகத்தின் அறிவகம்தான். அது உங்களின் வடக்கு மாவட்டத்தில் இருக்கின்ற, கழகத்தின் தலைமையகம். அதன்பிறகு, அறிவகத்திலிருந்து இன்றைய இளைஞர் அணி அலுவலகமான அன்பகத்திற்கு வந்து, அன்பகத்திலிருந்து இன்று அறிவாலயத்திற்கு வந்திருக்கிறோம். நாமும் இன்றைக்கு அன்பகத்திலிருந்து, இந்த நிகழ்ச்சிக்காக அறிவாலயத்திற்கு வந்திருக்கிறோம் என்பதை, நீங்கள் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும்.

இன்று, நேற்றல்ல. பல வருடமாக வட சென்னை கழகத்தின் கோட்டையாக இருக்கிறது. இளைஞர் அணியில் புதிதாக பொறுப்புக்கு வந்துள்ள நீங்கள் இளைஞர் அணியின் வரலாற்றைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

### மிகப்பெரிய பெருமை

1980- ஆம் ஆண்டு மதுரை ஜான்சி ராணி பூங்காவில் கலைஞர் அவர்களும், பேராசிரியர் அவர்களும் தொடங்கி வைத்ததுதான் நம் இளைஞர் அணி. அதன் பிறகு கிட்டத்தட்ட 45 ஆண்டு காலம் வெற்றிநடைப் போட்டுக் கொண்டு தமிழ்நாடு முழுக்க படிப்படியாக வளர்ந்து, இளைஞர் அணி ஒரு ஆலமரமாக வளர்ந்து நிற்கிறது. 1980 - ஆம் ஆண்டு இந்தியாவிலேயே முதன் முறையாக ஒரு இயக்கத்திற்கு இளைஞர் அணியைத் தொடங்கியது நம் திராவிட முன்னேற்றக் கழகம். அதைத் தொடங்கியவர் நம் கழகத் தலைவர் அவர்கள்தான். அதுதான் நம் தி.மு.க இளைஞர் அணிக்கு இருக்கின்ற மிகப்பெரிய பெருமை.

இன்றைக்கு இளைஞர் அணி நிர்வாகிகள் மட்டுமல்ல, மாவட்ட, ஒன்றிய, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள் வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு எனது நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். இளைஞர் அணி இன்றைக்கு இந்த அளவுக்கு வளர்ந்திருக்கிறது என்றால், அதற்கு மாவட்ட, பகுதி, வட்டக்கழக நிர்வாகிகள் உங்களின் ஒத்துழைப்பும் மிகமிக முக்கிய காரணம். அவர்கள் இல்லாமல் இந்த வளர்ச்சி கிடையாது.

இன்றைக்கு இந்தியாவில் பல இயக்கங்கள் பூத் கமிட்டி அமைக்கவே திண்டாடிட்டுக் கொண்டு இருக்கிற நேரத்தில் பூத்துக்கு ஒரு இளைஞர் அணி அமைப்பாளரை நாம் நியமித்துக்கொண்டு இருக்கிறோம். அதுதான் இளைஞர் அணியின் வலுவான கட்டமைப்பு. புதிதாக வந்திருக்கக்கூடிய நீங்கள் அத்தனைபேரும் உங்களின் காலரை தூக்கிவிட்டுக்கொண்டு, தி.மு.க. இளைஞர் அணியில் நான் ஒரு நிர்வாகியாக இருக்கிறேன் என்று பெருமையாக சொல்லிக் கொள்ளலாம்.

### கொள்கைப் பற்று

யாரோ ஒருவரின் பரிந்துரையின் பேரில் மட்டும் நீங்கள் தேந்தெடுக்கப்படவில்லை. முழுக்க, முழுக்க உங்கள் உழைப்புக்குக் கிடைத்த அங்கீகாரம் என்பதை நீங்கள் உணர வேண்டும். அன்பகத்தில் இதற்காகவே தனியாக ஒரு குழு அமைத்து, உங்கள் ஒவ்வொருவரையும் தொலைபேசியில் தொடர்புகொண்டு, உங்களுடைய குடும்ப பின்னணி, நீங்கள் ஏற்கனவே பொறுப்பில் இருக்கிறீர்களா, என்னென்ன நிகழ்ச்சிகள் நடத்தி இருக்கிறீர்கள், உங்களுடைய சமூக வலைதளச் செயல்பாடு எப்படி இருக்கிறது, உங்களுடைய கழக உணர்வு எப்படி இருக்கிறது, கொள்கைப் பற்று எப்படி இருக்கிறது, இவை அனைத்தையும் கேட்டறிந்து, இளைஞர் அணியில் பொறுப்புக்கு வருவதற்கு உங்களுக்கு ஆர்வம் இருக்கிறது என்பதை தெரிந்து இன்றைக்கு அத்தனை பேருக்கும் வருகைப் பதிவேடு எடுக்கப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக போட்டோ ஐடி கார்டு கொடுக்கப்பட்டு, இன்றைக்கு இந்த நாற்காலியில் நீங்கள் வந்து உட்கார்ந்து இருக்கிறீர்கள் என்றால், எவ்வளவு கட்டங்களைத் தாண்டி இந்த பொறுப்புக்கு வந்திருக்கிறீர்கள் என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். பல்வேறு கட்டங்களை தாண்டி இந்த பொறுப்புக்கு வந்திருக்கிறீர்கள்.

தலைவர் அவர்கள் அடிக்கடி சொல்வார். எனக்கு கொடுக்கப்பட்டிருப்பது பதவி கிடையாது. அது பொறுப்பு. அந்த பொறுப்பை உணர்ந்து நீங்கள் அத்தனை பேரும் பொறுப்பாக செயல்படுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இங்கே அண்ணன் ஆர்.டி.சேகர் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார். இளைஞர் அணியில் நீங்கள் சரியாக உழைத்தீர்கள் என்றால், நிச்சயம் உங்களுக்கான அங்கீகாரம் கிடைக்கும் என்பதற்கு இந்த மேடை ஒரு மிகச் சிறந்த உதாரணம்.

இங்கே அண்ணன் தாயகம் கவி அவர்கள் இருக்கிறார். நம்முடைய தலைவர் அவர்கள் இளைஞர் அணி செயலாளராக இருந்தபோது மாநில துணைச் செயலாளராக இருந்தவர்தான் அண்ணன் தாயகம் கவி அவர்கள். அதன் பிறகு நான் இளைஞர் அணி செயலாளராகப் பொறுப்பேற்ற பொழுது இளைஞர் அணி துணைச் செயலாளராக இருந்து என்னை வழிநடத்தியவர்தான் அண்ணன் தாயகம் கவி அவர்கள். அதன் பிறகு அவருடைய செயல்பாட்டை பார்த்து தலைவர் அவர்கள் இன்றைக்கு கழகத்தின் துணை அமைப்புச் செயலாளராக இன்றைக்கு அவர் உயர்த்தப்பட்டுள்ளார்.

### தாய் வீடு

அதேபோல, அண்ணன் ஆர்.டி.சேகர் அண்ணன் அவர்கள் சொன்னார்கள். இளைஞர் அணிதான் என்னுடைய தாய் வீடு என்று சொன்னார். நிச்சயமாக இளைஞர் அணிதான் அவருடைய தாய் வீடு. தாய் வீட்டை என்றைக்கும் மறக்க மாட்டார் என்று நம்புகிறோம். இளைஞர் அணிக்கு தேவையானதைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறார். அவரும் தலைவரின் குழுவில் மாநில இளைஞர் அணி துணைச் செயலாளராக சிறப்பாக பணியாற்றுகிறவர்தான். இன்றைக்கு மாவட்ட பொறுப்பாளராக மட்டுமல்ல, ஒரு சிறந்த சட்டமன்ற உறுப்பினராகவும் செயல்பட்டு கொண்டிருக்கிறார் அண்ணன் ஆர்.டி.சேகர் அவர்கள். அந்த பெருமை மட்டும் இல்லை. உங்களின் வடக்கு மாவட்டத்திற்கு. இன்னும் சொல்லப்போனால் 2026 வர இருக்கின்ற சட்டமன்றத் தேர்தலுக்கு தமிழ்நாட்டிலேயே முதன்முறையாக ஒரு கோடி ரூபாய் நிதியை கொடுத்து, அதை ஆரம்பித்து வைத்தவர் அண்ணன் ஆர்.டி.சேகர் அவர்கள்.

### எனக்கும் பக்கபலம்

இந்த மண்டலத்தின் பொறுப்பாளர், இளைஞர் அணி மாநிலத் துணைச் செயலாளர் சகோதரர் ஜோயல் அவர்கள். தலைவர் செயலாளராக இருக்கும் பொழுது அவர் மாவட்ட அமைப்பாளராக இருந்து, அதன் பிறகு மாநில துணைச் செயலாளராகி, இன்றைக்கு எனக்கும் பக்கபலமாக, சென்னையில் எந்த இளைஞர் அணி நிகழ்ச்சி என்றாலும் எனக்கு ஒரு வாய்ப்பு கொடுங்கள். சென்னையில் நான் சிறப்பாக ஒருங்கிணைக்கிறேன் என்று அதை ஒவ்வொரு முறையும் வெற்றிகரமாக செய்யக்கூடியவர்தான் ஜோயல் அவர்கள்.

ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர், அருமை சகோதரர் எபினேசர் இருக்கிறார். இரண்டு முறை மாவட்ட துணை அமைப்பாளராக இருந்து, அதன் பிறகு தலைவர் அவர்களால் கண்டறியப்பட்டு, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளராக பொறுப்பேற்று, இளைஞர் அணியில் அவரின் சிறப்பான பணிகளைப் பார்த்து, சென்ற முறை தலைவர் அவர்களால் 2021 சட்டமன்றத் தேர்தலில் ஆர்.கே.நகரில் போட்டியிடுகின்ற வாய்ப்பை பெற்றவர் எபினேசர் அவர்கள்.

உங்களுக்கெல்லாம் ஞாபகம் இருக்கும். 2021 தேர்தலில் அந்த எக்ஸிட் போல், சர்வே எல்லாவற்றிலும் நம்முடைய கழகம்தான் ஆட்சி அமைக்க போகிறது என்று எல்லாரும் சொல்லி விட்டார்கள். சென்னையில் அனைத்து தொகுதியிலும் வெற்றி உறுதி என்று சொன்னார்கள். ஆனால், இரண்டு தொகுதி மட்டும் சந்தேகம் என்று சொன்னார்கள். அந்த இரண்டு தொகுதி எது தெரியுமா? இராயபுரம், இன்னொன்று ஆர்.கே.நகர். ஆனால் நான் தலைவரிடம் சொன்னேன். ஆர்.கே.நகரில் இளைஞர் அணிக்கு ஒரு வாய்ப்பு கொடுங்கள். நாங்கள் வெற்றிபெற வைத்துக் காட்டுகிறோம் என்றுச் சொன்னேன். தலைவர் என்னைப் பார்த்து ஆர்.கே.நகர் மிகவும் விவரமான தொகுதி. அந்தத் தொகுதியில் எப்படி எல்லாம் தேர்தல் நடந்திருக்கு என்பது உங்களுக்கு தெரியும். அதனால் யார் வேட்பாளர் என்று கேட்டார். நீங்கள் இளைஞர் அணிக்கு ஒரு வாய்ப்பு கொடுங்கள். எபினேசர் அவர்களை அங்கு நிற்க வைத்து, வெற்றிப்பெற வைத்துக் காட்டுகிறோம். இது இளைஞர் அணி தம்பிமார்களின் கடமை என்று தலைவரிடம் வாக்குறுதி கொடுத்தேன். அவருக்காக பிரச்சாரம் செய்தேன்.

ராயபுரம் அதுவும் தலைவரிடம் சொன்னேன். கண்டிப்பாக ராயபுரம் வெற்றிப் பெற்று காட்டுறோம் என்றுச் சொன்னேன். பலமுறை பிரச்சாரத்துக்கு வந்தேன். பெரம்பூர் அது நிச்சயம் அண்ணன் ஆர்.டி.சேகர் அவர்கள் வெற்றி பெறப்போகிறார்கள் அது இளைஞர் அணியின் பயிற்சி. இந்த இளைஞர் அணி சொன்னது மாதிரியே வெற்றிபெற்றும் காட்டினோம் அது தான் இளைஞர் அணியின் பெருமை.'

இந்த இளைஞர் அணி பணியை நீங்கள் எப்படி கருத வேண்டும் என்றால், ஒரு முக்கியமான பணிக்கான பயிற்சிக் களம்தான் நம் இளைஞர் அணி பணி என்பதை நீங்கள் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும்.

இப்படி மிகவும் சிரமமான தொகுதி என்றுச் சொல்லப்பட்ட ஆர்.கே.நகரில் வெற்றி பெற்ற எபினேசர் இளைஞர் அணியின் தயாரிப்பு. மிகப்பெரிய வெற்றியை பெற்று தலைவரிடம் ஒப்படைத்தோம். அதேமாதிரி மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் சகோதரர் லயோலா மதனாக இருக்கட்டும், கௌதமனாக இருக்கட்டும், பகுதி அமைப்பாளராக சிறப்பாக செயல்பட்டு, இன்றைக்கு மாவட்ட துணை அமைப்பாளராக தலைவர் அவர்களால் உயர்த்தப்பட்டுள்ளார்கள்.

இங்க இருக்கக்கூடிய சகோதரர் ரவிக்குமார். பகுதி துணை அமைப்பாளராக சிறப்பாக செயல்பட்டு, இன்றைக்கு தலைவர் அவர்களால் மாவட்ட துணை அமைப்பாளராக உயர்த்தப்பட்டு பணியாற்றிக் கொண்டிருக்கிறார். இப்படி வடசென்னை மட்டுமல்ல தமிழ்நாடு முழுவதும் கழகத்தில் உள்ள மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதிக் கழகச் செயலாளர்கள் இருக்கிறார்கள்.

ஒரேயொரு வாக்குறுதி மட்டும் இளைஞர் அணி நிர்வாகிகளுக்குச் சொல்ல விரும்புகிறேன். நீங்கள் உழைக்க தயாராக இருந்தீர்கள் என்றால் உங்களை உயர்த்த நம்முடைய தலைவர் என்றைக்கும் தயங்க மாட்டார்.

நாளையிலிருந்து அடுத்த ஆறு மாதத்திற்கு ஒரு நாள் அல்ல, ஒரு மணி நேரத்தை கூட நாம் வீணடிக்காமல் களத்தில் இறங்கி மக்களோடு மக்களாக இருந்து, மக்கள் பணியாற்றி தலைவர் என்ன நினைக்கிறாரோ அதை செய்துகாட்டினால்தான் தலைவர் சொன்ன 200 அல்ல, 200-க்கும் அதிகமான தொகுதிகளில் வெற்றிப் பெற்றோம் என்றால், அதற்கு இளைஞர் அணி நிர்வாகிகள் உங்களின் பணி மிக மிக முக்கியம்.

### முக்கியமான வேண்டுகோள்

இன்னொரு முக்கியமான வேண்டுகோள். தினமும் காலையில் எழுந்தவுடன் தயவு செய்து நம்முடைய முரசொலி நாளிதழைப் படியுங்கள். அதிலும் குறிப்பாக கடைசிப் பக்கம் தலைவர் அவர்கள் இளைஞர் அணிக்கென தனியாக ஒரு பக்கம் கொடுத்திருக்கிறார். அதுதான் பாசறைப் பக்கம். படிப்பதற்கு மிகமிக சுலபமாக இருக்கும். சின்ன சின்ன துணுக்குகள், கார்ட்டூன்கள் இப்படித்தான் இருக்கும். அதை படித்தீர்கள் என்றால் உங்களின் அரசியல் அறிவு வளரும். நம் கழகத்தின் வரலாறு, என்னென்ன சாதனைகள் செய்திருக்கிறோம். தலைவர் அவர்கள் எவ்வளவு கஷ்டப்பட்டு, இந்தப் பொறுப்புக்கு வந்திருக்கிறார். கலைஞர் என்னென்ன தமிழ்நாட்டுக்குச் செய்திருக்கிறார். பெரியாரின் கொள்கைகள் என்ன இவற்றையெல்லாம் நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

### 200 தொகுதிகள்

இளைஞர் அணி சார்பாக களத்தில் மட்டும் இல்லை, கருத்தியல் ரீதியாகவும் பல பணிகளை நாம் செய்துகொண்டு இருக்கிறோம். இந்த கருத்தியல் பணிகளை எல்லாம் கொண்டுபோய் சேருங்கள். வருங்கால பத்திரிக்கையாளர்கள் உருவாக்க வேண்டும் என்று கலைஞர் மாணவர் பத்திரிக்கையாளர் திட்டத்தைத் துவக்கி இருக்கிறோம். இதையெல்லாம் இப்போது இருக்கக்கூடிய இளைஞர்களுக்கு எடுத்து சொல்லுங்கள். திராவிட அரசியலின் கொள்கைக் கூட்டமாக நீங்கள் இருக்க வேண்டும். இன்றைக்கு நம்முடைய அரசு பல்வேறு நலத்திட்டங்களைச் செய்து வருகிறது. அந்த திட்டங்களைப் பற்றி தெரிந்து கொள்ளுங்கள். நாளுக்கு நாள் நம் தலைவரின் வலிமையும், தி.மு.க-வின் வலிமையும் அதிகமாகிக்கொண்டே செல்கின்றது.

எனவே நம் ஒரேயொரு இலக்கு வருகின்ற சட்டமன்ற தேர்தலில் தலைவர் சொன்னதைவிட, அதிகமாக 200 க்கும் அதிகமான தொகுதியில் வெற்றிப்பெற்று காட்ட வேண்டும். அதன் துவக்கமாக இந்த சென்னை வடக்கு மாவட்டத்தில் இருக்கக்கூடிய மூன்று தொகுதிகளையும் வெற்றிப்பெற்று காட்ட வேண்டும். அதில் இளைஞர் அணியியின் பங்கு முதன்மையாக இருக்க வேண்டும். முன்களப் படை வீரர்களாக செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

2026 சட்டமன்ற தேர்தலில் ஏழாவது முறையாக கழக ஆட்சி அமைய வேண்டுமென்றால், இரண்டாவது முறையாக தொடர்ந்து நம்முடைய தலைவர் அவர்கள் முதலமைச்சர் நாற்காலியில் உட்கார வேண்டுமென்றால், அந்த வெற்றி இளைஞர் அணி தம்பிமார்கள் உங்களுடைய கைகளில்தான் இருக்கிறது என்பதை நீங்கள், உணர்ந்து செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, புதிய வட்டம் மற்றும் பாக இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் உட்பட, இங்கு வருகை தந்திருக்கக்கூடிய உங்க அத்தனைபேரின் பணிகள் சிறப்பாக அமையட்டும்.

வெல்வோம் இருநூறு, படைப்போம் வரலாறு என்று கூறிக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் எழுச்சிமிகு உரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்

இதில் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.டி.சேகர், ஐட்ரீம்ஸ் மூர்த்தி, எபினேசர், தாயகம் கவி, நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர் ஜோயல், மாவட்டக் கழக நிர்வாகிகள் வெற்றிவீரன், கமலக்கண்ணன், கோபி, தயாளன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இளைய அருணா, மனோகரன், இரா. கருணா, பகுதிக் கழகச் செயலாளர்கள் ஜெயராமன், முருகன், வா.பெ.சுரேஷ், ஜெபதாஸ் பாண்டியன், செந்தில், இரா.லட்சுமணன், தொகுதி பார்வையாளர்கள் சுபேர் கான், கண்டிகை ஸ்டாலின், லோகேஷ், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள் நரேந்திரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் பிரகாஷ், மதன்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் ராஜேந்திரன், சிவக்குமார், மதிவாணன், சேகர், கமலக்கண்ணன், சண்முகம், அமுலு, தமிழ்ச்செல்வன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் லயோலா மதன், கௌதமன், பொன்.இளவரசன், கட்பீஸ் சோமசுந்தரமூர்த்தி, ரவிக்குமார், பகுதி இளைஞர் அணி அமைப்பாளர்கள் சுரேஷ், ராஜ்குமார், ஹரிஸ்குமார், கார்த்திக், அப்துல் மாலிக், சாந்தகுமார், சமூக வலைதளப் பயிற்சியாளர் விக்னேஷ் ஆனந்த், அன்பகம் செந்தில், ஜெயப்பிரகாஷ் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.